DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | காந்தா (எ) காந்திமதி | Village | வடக்குப்பட்டு |
| Husband's Name | திருப்பதி | Taluk | வாணியம்பாடி |
| Age | 65 | Calling | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **16.07.2026**

**O.S. No. 160/2022** **வா.சா.1** **04.47 PM – 05.05 PM**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

1. வழக்கு சொத்தின் நான்கு புற எல்லையில் யார் யார் சொத்து உள்ளது என வழக்கில் கூறவில்லை என்று சொன்னால் வழக்கறிஞர் பார்த்துக் கொள்வார் என்று இருந்தேன். இன்றைய தேதி வரையிலும் வருவாய் துறை ஆவணங்களை பார்த்து நான் யார் யார் வழக்கு சொத்தை ஒட்டி உள்ளார்கள் என தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். 1 ஏக்கர் 80 சென்ட் நிலமானது அடையாளம் காட்ட முடியாது என்று சொன்னால் சாட்சி அதற்கு 3 இடத்தில் அங்கும் இங்கும் இருக்கிறது என கூறுகிறார்.

2. மூன்று துண்டுகளும் எங்கே எங்கே உள்ளது என்று சொன்னால் முதல் துண்டு எங்களது நிலமும், அதற்கு அடுத்து பங்காளி சம்பத் என்பவரின் நிலமும் அதற்கு அடுத்து பலருடைய நிலம் உள்ளது, சுமார் ½ கி.மீ இடைவேளிக்கு பிறகு இரண்டாவது துண்டு உள்ளது. 3வது துண்டானது அங்கிருந்து ½ கி.மீ தொலைவு இருக்குமா என்றால் இருக்கும்.

3. ஒவ்வொரு துண்டிலும் எவ்வளவு சொத்து உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 3 துண்டாக உள்ளது என்று நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதி சுப்பிரமணி என்பவர் சிங்கப்பூரில் இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். மேற்படி நபர் சிங்கப்பூரில் சுமார் 15 வருடங்களாக வசிக்கிறார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்தபோதும் 2ம் பிரதிவாதி சிங்கப்பூரில் தான் இருந்தார் என்றால் இருந்திருக்கலாம், வழக்கை சுபாஷ் பெயரில் தான் தாக்கல் செய்ய சொன்னேன். சுபாஷ் மீது மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்ய சொல்லி நானும் 4 முதல் 7 பிரதிவாதிகளும் ஒன்றாக சேர்ந்து வழக்கறிஞர் அலுவலகம் சென்றோம் என்றால் சரி அல்ல.

4. என்னைப் பொறுத்தவரையில் சுபாஷ் மீது மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்ய சொன்னேன் என்றால் சரிதான். யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சாட்சி பதில் எதுவும் கூறாமல் நிற்கிறார். ஒரு விஸ்வநாதன் என்பவரிடம் இருந்து ரூ.6,50,000/—த்தை 1ம் பிரதிவாதி கவிதா கடன் வாங்கியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் எத்தனை வீடுகள் அமைந்துள்ளது என்றால் வீடுகள் எதுவும் இல்லை, வெறும் மேட்டு நிலங்கள் தான் உள்ளது, 13 பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டது. நான் மேற்கூறிய 13 நபர்களை வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

5. எனக்கு திருமணம் ஆனதிலிருந்து அந்த நிலத்திற்கு நான் செல்வதும் இல்லை மற்றும் பயிர் செய்யவில்லை என்றால் சரியல்ல, தற்போது நான்கு ஐந்து வருடங்கள் தான் சரியாக பேச்சுவார்த்தை இல்லை அதற்கு முன்பு மூன்று குடும்பத்தாரும் ஒன்றாகத்தான் பயிர் செய்து வந்தோம். வழக்கு தாக்கல் செய்வதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணன் என்பவர் தான் அனுபவித்து வந்தார் என்றாலும் அவருக்கு தான் உரிமை உள்ளது என்றாலும் எனக்கு எதுவும் சொத்தில் உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN
DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.